

# ஆன்மீகக் கிளர்ச்சி


Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

+94763223960



11-08-2024


# ஆன்மீக கிளர்ச்சியாளர் இயேசு






என்னை “நான்”(I –EGO) அறியாத
அகங்கார இருளில் மூழ்கித் தவிக்க
(Not knowing my true self)
இறைமகனாய்த் தன்னை அறிந்த தூயமனம்
(Christ Consciousness)
கடந்தும் எங்கும் நிறைந்திருக்கும்
(Transcendental)(The unchanging, self-existent- God)
பிரபஞ்ச இருப்பை (Universal Existence)
சுத்த சைதன்யத்தை-சின்மயத்தை
(Pure Existence or Consciousness))
(SAT CHIT ANAND) (Existence-Truth-Bliss)
அப்பா தந்தாய் என்றழைத்தே (Our Father)
என்னைத் தன் சகோதரனாக்கியது.(Brother Hood) (Unity)





தன்னை அறிந்த மெய்யறிவால் (Self-realization)
அது இறைமகனானது ( Son of God)
பிரக்ஞானம் பிரம்மம் சத்தியமானது

இறைவன் நம் தந்தை, நான் உன் சகோதரன்
ஒரே குடும்பம் நாம், அன்பு உறவே மதம்.

ஆணவம் கழித்து, என்னை நான் அறிந்திட
வழியும், உண்மையும், வாழ்வும் “நானே”
சத்திய கீதையும், கீர்த்தனையுமானது
(I am the way, truth and the Life) (Pure Consciousness)
(Renunciations of ego is the path to life)






நானும் தந்தையும் ஒன்றே- தூய உணர்வே நான்
அயம் ஆத்மா பிரம்மம், அஹம் பிரம்ம அஸ்மி-தத் த்வம் அஸி
மகா வாக்கியங்களை அனுபூதியில் அறிந்துணர
இயேசு விடுக்கும் அழைப்பு.

புழுதியில் கிடந்தவனை, இறைமடியில்
அமர்த்திடும் அற்புதம், அன்போ தெய்வீகம்

“நான்” என்னும் ஆணவத்தால்
(Ego) Adam’s Consciousness-Naked);
இருண்ட பள்ளத்தாக்கில் என் இருப்பு (ID & Ego)
இறையோ உயர்ந்த தூய உள்ளுணர்வு
(The Highest Universal Consciousness)

பிரபஞ்சமாய் அதன் உருவக இருப்பு (Who art in Heaven)
தாழ்ந்த இருப்பு(ID) பரிபூரண சரணாகதியில்
(Total surrender of the self)
இறைவனை-இருப்பை ( I am Who I am )




பரலோக தந்தையே என்றழைக்க (Our Father) (Providences)
முழுமையும், தூய்மையுமானதை (Whole and Holy)
பரிசுத்தம் என்று பக்தியோடு துதிக்க (Hallowed be thy name)
(blessed are the poor in spirit,the Kingdom of God belongs to them)
ஆணவம் மடிந்திட- என்னுள் மலரும் இறையரசு
உம் இராட்சியம் வருக என அழைக்கின்றது

பூரணத்திடம் பரிபூரண சரணாகதியடைந்திட
ஆணவம் கழிந்த தூய மனம் ஒளிர்கின்றது
விழிப்புணர்வே தூய மனம் -துரியாதீதம்(Pure mind)
என் சித்தமன்று -உம் சித்தம் நிறைவேறுக
என்று சரணடையும் தூய மனம்
தந்தையும், நானும் ஒன்றென்று பூரிக்கும் அத்வைதம்

என் புனித இருப்பை என்றும் காத்திட (Godliness)
விழிப்புணர்வில் கணம் தோறும் வாழ்ந்திட (Mindfulness)
அன்றாட உணவாய் இறை வார்த்தையை வாஞ்சிக்கின்றது
(Give us thy word as our daily bread)
(Fulfilling thy will is my food)




காலம் இல்லாக் காலத்தில் -கணந்தோறும்
நித்தியத்தில் வாழும் தூய மனம்,
நேற்று, நாளை என்பது அங்கில்லை
இருப்பதோ நிகழ்காலம்





நன்மை, தீமை (good and evil), நண்பன், எதிரி என்ற
இருமை கடந்து (Transcend the Dualism) (heaven & hell)
கருணையால் ஒளிர்கின்றது. (Compassionate)
(Forgive our trespasses, as we forgive those
Who trespasses against us)

தந்தையே தாம் செய்வது இன்னதென்று
இவர்கள் அறியார்-இவர்களை மன்னியும்
தூயமனமே மனம் வேண்டுகின்றது
(Father forgive them)
ஆணவமழிந்த தூயமனமே மன்னிக்கும்

மீண்டும் "நான்" என்ற ஆணவ சோதனைக்குள்ளாகாமல்
(Lead us not into Temptation) இருமையின் இருளுக்குள் ஆழ்ந்து





( Knowing Good and Evil)
தூய மனதை இழந்து
( Loosing Christ Consciousness and falls
down to Adam's Consciousness)
தீமை கடந்து (deliver us from Evil)
விழிப்புணர்வில் நிலைபெற
(State of Awareness) (Christ Consciousness)
அருள்தருவாய் இறைவா என்றே.
தன்னை அறிந்த தவத்தால் வரமாய் வேண்டுகின்றது.
(Father and I are one)- (Thou art Thee-)

" நான்" எனும் ஆணவமே சோதனை-
Lucifer -சாத்தான் என்பது ஆணவத்தின் குறியீடு
ஆணவம் வீழ்ச்சி பெறும் என்பது லூசிபரின் உருவகமே
நம் அகங்காரமே சாத்தான்-ஆணவமே
எல்லா துன்ப நிலைக்கும் காரணகர்த்தா

ஆணவ நிலையில் சுயநலம் தோன்றிட
நாம் அறியாமை இருளுக்குள் வீழ்த்திட
ஆணவமே நம்மைச் சோதிக்கின்றது
ஆணவமே சோதனை-ஆணவமே அலகை








முழுமையும் முடிவிலியுமான இருப்பாய்
(Whole and Eternal) பரமாத்தா நீ ( I AM WHO I AM)
ஆணவ இருப்புமாய் ஜீவாத்மா "நான்"
கடல் நீ--துளி நான், கலந்திடப் பிறக்கும் நிலைவாழ்வு,
பிரபஞ்ச பேரின்ப இருப்பின் சங்கமத்தில்
என் புதுப்பிறப்பு (Born Again)
நானில்லை எல்லாம் நீயே என்ற (Thou art thee)
விழிப்பில் ஆனந்த பேரின்பக்களிப்பு (Enlightment)

தீமை நிலைமாற்றம் பெற தேவையாய் உள்ளார்ந்த வீரியம்
கணந்தோறும் வாழும் தூய மனம்
அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்
தீமையிலிருந்து இரட்சியும் என வேண்டுகின்றது


மீண்டும் மீண்டும் ஆணவ நிலைக்கு தாழும்
அவல நிலையிலிருந்து என்னை காத்திடும் -மெய்யறிவு
அதுவே தன்னை அறிந்த விழிப்புணர்வு

எப்போதும் இருப்பதோ (Nothingness) சத்-சித்-ஆனந்தம்.
*(Pax Christy-Peace of Christ) (Existence- Truth-Bliss)*





*The Transcend of Adam's consciousness*
*Into Christ Consciousness is Peace*
*Self-begets selfishness.*
*There is no evil but what flaws from evil*
*Self is the tempter, the evil doer,*
*The creator of mischief.*
*The Consciousness of self-dims the eyes of the mind*
*And hides the truth, it is the origin of error.*
*It is the source of illusion, It is the germ of evil*

அகமகிழுங்கள் மானுடரே, நம்பிக்கை கடந்து
வாழ்ந்தறியும் நற்செய்தியை கேளுங்கள்
ஆனந்தம் கொள்ளுங்கள், இயேசு பெருமான்
துக்கத்தின் ஆணி வேரை அறிந்தார், கருணையினால்
மானுடம் மீட்புறும் பாதையை காட்டியருளினார்




மனத்தின் மாயைத் தகர்த்து, கொடிய மரணத்தின்
பிடியை உடைத்து, துன்புறுவோர் இன்புற, துயருறுவோர்
அமைதி காண, நம்பிக்கை நலிந்தோர் புத்துயிர் பெற
வருந்திச் சுமை சுமந்திருப்போர் இளைப்பாறுதல் பெற
பெருமான் இயேசு உங்களையும் அழைக்கின்றார்

காயமுற்றோருக்கு ஔடதமும், பசித்திருப்போருக்கு உணவும்,
தாகமுற்றோருக்குப் பானமும், நம்பிக்கை நலிந்தோருக்கு
நம்பிக்கையும், இருளில் தடுமாறுவோருக்கு ஒளியும்
நேரிய மனத்தவருக்கு ஆசிருமாய் பெருமானின் போதனை





உண்மையைத் தேடிக் களைத்தவரே, உண்மையை
பெருமான் கண்டறிந்தார், அஞ்ஞான இருளை நீக்கும்
ஒளியாய் பெருமானின் மெய்ஞானம்-இருள் நீங்கி
ஒளிரும் பாதையில் நம் பயணம்


உண்மையே நம் தளைகளைத் அறுத்து விடுதலை தரும்
உண்மையே நம் மனக்காயங்களை ஆற்றும் சஞ்சீவினி
வாழ்விலும், சாவிலும் நமக்கு பலம் அளிப்பது சத்தியமே
தீமையின் வேர்களை அறுப்பது உண்மையே

எல்லாம் மாறும் உலகில், மாறாதது ஏதுமில்லை,
இதுவே உண்மை, பிறப்பு, இறப்பு, இளமை, முதுமை
இணைதல், பிரிதல் இதுவே உலகின் நியதி, உலகின் மகிமையோ
மலரைப் போன்றது காலையில் மலர்ந்து, மணம் வீசி, வெயிலில்
காயந்து, மழையில் நனைந்து அந்தியில் உதிரும் மலர் போன்றது

எங்கும் போராட்டம், இன்பம் தேடும்
உலகில் எந்நாளும் துன்பமே
ஆசைத் தீ எரிக்க துன்பமும், சாவும்
நெரிக்க, வாழ்வு நாளும் போராட்டமே





உலகில் நிலையானது ஏதுமுண்டோ?
வாழ்வில் போராடிக் களைத்தவர் இன்புற,
அமைதியில் நிலைத்திட புகலிடமுண்டோ?





வாட்டும் கவலைகள் ஓயுமோ?
வருத்தி எரிக்கும் ஆசைத் தீ அணையுமோ?
மனம் அமைதி காணுமோ?
எங்கும் துக்கம், எங்கும் சோகம்

நேரிய வாழ்வு வாழ்ந்து நிலையான
செல்வத்தை சுவீகரியுங்கள், உண்மையே
பெருஞ்செல்வம், நேரிய வாழ்வே அமைதி

கூட்டுச் சேர்வைகள் பிரிந்தழியும், இணைதலும்,
பிரிதலுமான இயற்கையின் விதி மாறாது, உயிர்கள்
மடிந்திட உடல்கள் அழியும், உண்மையோ
மனதின் அழியாத பகுதி, அமரத்துவமான நியதி





உண்மையை மனதில் நிலை நிறுத்துங்கள்
இயேசு பெருமான் கண்டறிந்த உண்மை
உங்கள் இதயங்களில் வாழட்டும், உண்மையினால்
துன்புறுத்தும் ஆசையை அறுத்தெறியுங்கள்

கிறிஸ்து மனம் உங்களில் மலரட்டும்
இயேசு கிறிஸ்துவாய் மாறாத இதயம் துன்புறும்
ஆசை மனமே துன்பத்தின் ஆணிவேர்
கிறிஸ்து நிலையை மறைக்கும் தடுப்புச் சுவர்

உண்மையினால் உங்கள் மனதை நிரப்பிட வெற்றுக் கொள்கலனாய்
மனம் மாறாட்டும், தீமையை விலக்கி தூய்மையை நாடுங்கள்,
உண்மையை அடைய வேறு பாதையில்லை


சுயத்தையும், உண்மையையும் பிரித்தறியுங்கள்
நான் என்பதே சுயநலம், தீமையின் ஆதாரம்.
உண்மை எதையும் பற்றி நிற்பதில்லை-உலகளாவியது
நீதிக்கும், நேர்மைக்கும் உங்களை வழி நடத்தும்
சுயம் என்பது மாயை, சுயத்தை தேடாதீர்கள்

உண்மையைத் தேடுங்கள். உண்மையோ
அழியாத பெருநிதி, சுயத்திலிருந்து மீண்டால்
எந்த துன்பமும் எம்மை அனுகாது
பட்டை தீட்டிய வைரம்போல் நம்
வாழ்வு ஞானத்தால் ஒளிரும்




தீய்க்கும் ஆசைகளும், அலைக்கழிக்கும் மாயையும் மறைந்திட,
அமைதி நிலைத்திடும், உங்கள் மெய்யான சுயத்தை அறிவீர்கள்
ஆணவமோ பொய்யானது, ஆணவம் கழிந்த
தூய மனமே நம் சொந்த இருப்பானது

தன் மெய்யான இயல்பை அறிதலே ஞானம்.
தூய மனமே நம் இருப்பு
தூய மனத்தவருக்க சத்திய தரிசனம்




புலன்களை வென்று, ஆசையின் ஆணிவேரை அறுத்தவர்
அமைதி காணகிறார், உண்மையே விடுதலை அளிக்கும்
ஆணவ மனதினின்று பெறும் விடுதலையே
மெய்யான சுதந்திரம், அதுவே சச்சிதானந்தம்

மாறும் உலகில் மாறாத ஒன்றைக் கண்டவர்கள்
புத்தர்களே, உண்மையைச் சரணடைந்து,
உண்மையில் நம் வாழ்வை நிலை நிறுத்திட, அவர்
வார்த்தையை வாழ்வாக்கி, சத்தியத்தை தேடலாக்கி,
சத்தியத்தில் வாழ்வாரோடு, சங்கமித்து நம்மில்
கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை சாத்தியமாக்குவோம்





பெருமான் புத்தர் மொழிந்த மைத்திரேய புத்தர் இயேசு கிறிஸ்து
அன்பினால் இன்புற்று அனைவரும் சகோதரர் என
அழைக்கும் பெருமான் மைத்திரேய புத்தரே

மானுடம் உய்ய, வழியும், உண்மையும்,
வாழ்வும் காட்டிய பெருமான்கள், அன்பினால் இன்புற்று
தம்மை உலகிற்கு உவந்தளித்த சீமான்கள்
***உண்மையே விடுதலை அளிக்கும்***


முற்பிறப்பில் செய்த கர்ம வினைகளின் விளைவே
இப்பிறப்பு, வினை விதைத்தவன் வினை அறுக்கிறான்,
தினை விதைத்தவன் தினை அறுக்கிறான், காரண
காரியத்தைச் சார்ந்த என்றுமுள்ள தர்மம் மாறாதது
“ஏஸ தம்மோ சனந்தனோ”

சுயத்தின் உணர்வோ, உண்மையை அறியத் தடையாயுள்ளது,
நான் மறைந்தால் தோன்றும் தூய உணர்வே நம் மெய் இயல்பு

ஆணவமே சுயநலம், ஆணவத்தின்
விளைவே தீமை, ஆணவமே அலகை,
ஆணவமே நம்மைச் சோதிக்கின்றது





சுயமோ புலன் இன்பம் சார்ந்தது
பொய்யான இன்பலோகத்தை சிருஷ்டிக்கின்றது
மாயையின் திரையே நான் என்னும் சுயம்
சுயமோ ஆசையின் வடிவம், ஆணவ மனமே அது




ஆசையின் அணிவேரை அறுத்தால் உண்மையில்
நம் இருப்பு, உண்மையோ ஆனந்தம்
உண்மையே ஆசையை அறுத்து விடுதலை அளிக்கும்
மெய்யறிவே ஞானம்

துன்பம் மலைபோல் வந்தாலும்
உண்மையில் நிலைத்த உள்ளம் கலங்காது
இருமை கடந்த தூய மனம் அமைதியில் நிலைக்கும்
தூய மனமே நம் மெய்யான இருப்பு

***வழியும் உண்மையும் வாழ்வும் "நானே"–***
ஆபிரகாமிற்கு முன் " நான்" இருக்கிறேன்




His Message:


He gave to the world the grand but simple message of his great life, "Know Thyself". "Enquire, 'Who am I?' Make the mind calm. Free yourself from all thoughts other than the simple thought of the Self or Atma. Dive deep into the chambers of your heart. Find out the real, infinite 'I'. Rest there peacefully for ever and become identical with the Supreme Self."

"நான்" என் உயிரைக் கொடுக்கிறேன்-அதை
மீண்டும் பெற்றுக்கொள்ளவே கொடுக்கிறேன்
என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக்
கொள்வதில்லை, நானாகவே அதைக் கொடுக்கிறேன்
உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு
அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதிகாரம் உண்டு,
என் தந்தையின் கட்டளைப்படியே
"நான்" இப்படிச் செய்கிறேன்
**நானும், தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம**

அழியக் கூடியது கூட்டுச் சேர்க்கையாலான உடல்
அழிவற்றது ***தூய உள்ளுணர்வு***-அதுவே **கிறிஸ்து நிலை**

" நான்" உங்களுக்குச் சொல்கிறேன்
அதிகாரமிக்க மனுமகன் போதனைகள்
உள்ளுணர்வின் உயர் நிலையில் அவர் இறைமகன்
உடல் உணர்வில் அவர் மனுமகன்

கடவுள் ஒரு நபரல்ல, இருப்பாய் இருப்பது
“இருப்பவர் நாமே” என்னும் தூய உள்ளுணர்வு நிலை
தூய உள்ளுணர்வு நிலையே இறைவன்
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்’




கட உள்ளே கடவுள் நீ
சத், சித், ஆனந்தமே நம் மெய்யான இருப்பு
நம்மை அறிவதே மெய்யறிவு, நிர்வாணம்,
கிறிஸ்து நிலை அதுவே





இறைவன் விலங்கு இரு நிலைகளுக்குமிடையே
ஊசலாடும் மனித உணர்வு
உள்ளுணர்வில் உயர்ந்தால் இறைவன்
தாழ்ந்தால் விலங்கு

“விழிப்பாயிருங்கள்” பெருமானின் மாறாத எச்சரிக்கை,
விழிப்புணர்வே அவர் தரும் பெருங் கொடை
“இறை வார்த்தை” நம் உணவும் பானமுமாகி நம்முள் ஓடும்
உயிர்க்குருதியானால், வாழ்வே வழிபாடு, ஒளியில் நம் நிலைப்பாடு

உலகின் ஒளி நீங்கள்!, உங்கள் ஒளி ஒளிர்வதாக,
உலகின் உப்பு நீங்கள், வாழ்வைச் சுவையாக்குங்கள்
உங்கள் தந்தை தூயவராய் இருப்பதுபோல்
நீங்களும் தூயவராய் இருங்கள்

உன்னை அன்பு செய்வதுபோல்
உன் அயலானையும் அன்பு செய்,
மனிதர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென
நீங்கள் விரும்புகிறீர்களோ
அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்





பகைமைமையப் பகைமையால் தணிக்க முடியாது
பகைமையை அன்பினால் தணியுங்கள்
எதிரியையும் அன்பு செய்யுங்கள்


வருந்திச் சுமை சமந்திருப்போரே- எல்லோரும் என்னிடம் வாருங்கள்,
என் நுகம் இனிது என் சுமை எளிது, வாழும் கலைக்கு அன்பினால்
இலக்கணம் வகுத்த பெருமான், உள்ளுணர்வின் உயர் நிலையே மீட்பு,
தனி மனித அகக்கிளர்ச்சியாளனாய் அவர் கர்ச்சனை

பலியை அல்ல இரக்கத்தையே இறைவன் விரும்புகிறார்
நொருங்கிய இதயத்தை இறைவன் ஒருபோதும் புறக்கணிப்பதில்லை

உங்களை நான்அன்பு செய்வதுபோல்- நீங்களும்
ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்
இதுவே என் கட்டளை


ஆதியில் இறைவன் தம் சாயலாய்,
ஆணும் பெண்ணுமாய் மனிதரைப் படைத்தார்,
முதல் குழந்தை உள்ளமோ இறை தந்த கொடை
அதுவே இன்பவனம், சச்சித் ஆனந்தம் நம் இயல்பு





ஆசை மனம் “கடவுளைப்போல்” ஆக விரும்பி
விலக்கப்பட்ட அறிவுக் கனியை உண்டு
தூய மனதை இழந்து, ஆணவத்தில் நிலைத்தது.
தூய மனமே இன்பவனம்-இன்பவனம் மறைந்திட
ஆதி மனிதனுக்கு ஏமாற்றம் சொந்தமானது,
வாழ்வு துன்பம் நிறைந்த போராட்டமானது

பரிபூரண சரணாகதியில் என் சித்தம் அன்று உம் சித்தம்
என்னும் இயேசு மனம் இன்பவனத்தை தன்னுள் அடைந்திட
வாழ்க்கை வட்டம் பூர்த்தியானது




நம்முள்ளே மோட்சம், நரகம்- நம்மை
அறியும் அறிவே மெய்ஞானம், நிர்வாணம்
தன்னுள் இன்பவனத்தை கண்டடைய
“மனந்திரும்புங்கள்” இயேசுவின் அழைப்பானது

திருச்சட்டத்தை அன்பினால் புடமிட்ட பெருமானை
அகக்கிளர்ச்சியாளனை மதவாதம் கொன்றதே உண்மை
இயேசு நம் பாவங்களுக்காய் மரித்தார் என்பதோ
பரிசேயன் பவுலின் பொய்மை, இறையிலாளரின் கொள்கை





ஆணவம் துறந்து அன்பில் நிலைத்திட, பாலை மனங்கள்
செழித்திட, மழையாய் மலைப்பொழிவு, விழித்திருங்கள்,
பசித்திருங்கள் தன்னில் நிலைத்திருங்கள்,
விழிப்புணர்வே மோட்சத்தின் திறவுகோல் முழங்கியது

விபச்சாரியையும், கொல்ல முனைந்த கூட்டத்தையும் காத்த நீதி
வதைப்போரையும் மன்னிக்கத் தந்தையை வேண்டிய கருணாநிதி,
வாழ்வும், போதனையும் ஒன்றான புரட்சி,
சட்டம், பலி, சடங்கு கடந்து
உண்மை, அன்பை தவமாக்கி, உருவற்ற இறைவனை
அவர் இயர்பிற்கேற்ப உள்ளத்தில் வழிபடுதலே
மெய்யான வழிபாடு முழங்கிய கிளர்ச்சி

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே
உம் நாமம் பரிசுத்தம், உம் ஆட்சி வருக
உம் திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல்
மண்ணுலகிலும் நிறைவேறுக

அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்
எங்களுக்கு எதிராக குற்றம் செய்தவரை நாங்கள்
மன்னிப்பதுபோல், எம் குற்றங்களை மன்னியும்
எங்களைச் சோதனையில் விழ விடாதேயும்
தீயோனிடமிருந்து எங்களைக் காத்தருளும்


எல்லாம் வல்லவராய்-Omnipotent, எங்கும் நிறைந்தவராய்
-Omnipresent, எல்லாம் அறிந்தவராய்- Omniscient
எட்டாத வானகத்தே வாழும் அந்நியனாய்-impersonal
அறிவுக்கெட்டாதவராய்-Transcendental இறைவன்





இறைவனை, அப்பா, தந்தாய் என்றழையுங்கள்
இறைவன் நம் தந்தை -இறை குடும்பம் நாம்
நீங்கள் என் சகோதரர்-நாம் தெய்வங்களே
உறவாடக் கற்றுத்தந்த உன்னத குரு இயேசு

கடவுள் எனும்போது இறைவனோ தத்துவம்
தந்தையோ நம் இரத்த உறவு
இயேசு நம் சகோதரன், நாமும் இறை மக்களே

பரிபூரணத்தின் நாமம் பரிசுத்தம்
பரிசுத்தமே பரிபூரணம்.( God is whole & holy )





தந்தையும் தாயுமானவனாய் மெய்பொருள்,
பக்தி மார்கமே எளியோருக்குப் பாதை
அம்மை, அப்பன் என்றழைத்து இன்புறுங்கள்
இறை குடும்பம் நாமே என்று பண் பாடுங்கள்





உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்
நல்மனத்தவருக்கே அமைதி, என் சித்தமன்று,
உம் சித்தம் என்னும் பரிபூரண சரணாகதியே
ஆணவம் கழித்திடும் அரிய வழி

உண்மையை அன்பால் ஓதுதலே வாழ்வு
ஆணவமழிந்த பரிபூரண சரணாகதி
சச்சித் ஆனந்தமே நம் பெருநிதி

இறை வார்த்தையே -வாழ்வுதரும் அன்றாட உணவு
இன்றைய நாளை, வாழ்வதற்கான ஆற்றலை
அன்றாட உணவாய் தந்தையே எமக்கருளும்
கணந்தோறும் விழிப்புணர்வோடு வாழ்தலே
வாழும் கலை
இறை வார்த்தையை வாழ்வாக்கிட
***-இம்மானுவேலாய் கடவுள் நம்மில் வாசம்***
இறைமக்களாய் எம் உருமாற்றம்,
ஏதேன் நம் சொந்தம்.





தூய மனமே-அன்பில் நிலைத்து, இருமை கடந்து -நான், நீ,
எதிரி நண்பன் கழித்து குற்றங்களை மன்னிக்கும்
மன்னிக்கும் மனமே தெய்வீகம்
மன்னிக்கும் மனமே இறை மன்னிப்பை பெறும்




ஆணவமே சோதனை, செயல் கழித்து
மனமழிய- சும்மா இருத்தலே பேரின்பம்.
விழிப்புணர்வே வரம்

அறிவு மனமே இருமையின் இருப்பிடம், இருமை கழிய
ஒருமை பிறக்க, ஆணவ "நான்" அழியத் தோன்றும்
தூய மனதிற்கே சத்திய தரிசனம்
ஆணவ மனமே நரகம்-தூய மனமோ மோட்சம்

நான் நீ என்ற பேதங்களில்லை, இருப்பது ஒன்றே
அதுவே தெய்வீகம், அஹம் பிரம்ம அஸ்மி-தத்துவமஸி
நானும் தந்தையும் ஒன்றே, அனல் ஹக் எல்லாம் நாமே
***வாழ்வே தவமாக இயேசுவின் ஜெபம்.***





***நம்மை வெறுமையாக்கி, இறைவார்தைக்கு***
***செவிமடுத்தலே ஜெபம்.***, மனம் கழித்து,
அறிவு கடந்த இதய கீதமே -ஜெபம்.

இறையியலுக்குள் அடங்க இறைவன் பாடமல்ல
தத்துவமல்ல விவாதிக்க-சத்தியம் தரிசனமே
சச்சித் ஆனந்தம் அதுவே-ஆதுவே நாம்
தூய உணர்வு நிலையே இறைவன்

கேளாதீர்கள் எல்லாம் இங்கே உள்ளது
தட்டாதீர்கள் எதுவும் பூட்டப்படவில்லை
தேடாதீர்கள் எல்லாம் உங்களுக்குள்ளே
கண்டு கொள்ள-கட உள்ளே-கடவுள் நீங்களே

விழிப்புணர்வே திறவுகோல்
கேட்கச் செவியுள்ளவர் கேட்கின்றார்
காண விழியுள்ளவர் காண்கிறார்

நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவளித்தீர்கள்
தாகமாய் இருந்தேன், தாகம் தணித்தீர்கள்
அன்னியனாய் இருந்தேன் என்னை ஏற்றுக் கொண்டீர்கள்
ஆடையின்றி இருந்தேன், ஆடை தந்தீர்கள்
நோயுற்று இருந்தேன் என்னைப் பராமரித்தீர்கள்
சிறையில் இருந்தேன், பார்க்க வந்தீர்கள்-(மத் 25:35)





அன்பே மேல் வரிச்சட்டம், இரக்கமே நீதி
அன்பே இறைவன், இறைவன் யாரையும் தண்டிப்பதில்லை
நம் பாவங்களே நம்மைத் தண்டிக்கின்றன


ஆசை, அறியாமையே துக்கத்திற்கு காரணம், துக்கம்,
துக்கத்தின் காரணம், துக்க நிவாரணம்,
துக்க நிவாரண மார்க்கம் அறிந்த மனம் தாம் அறிந்ததை
உலகறிய "மனந்திரும்புங்கள்" அழைத்தது

மனந்திரும்பி, கள்ளங் கபடற்ற குழந்தை உள்ளத்தோராய்
மீண்டும் பிறத்தலே-இரண்டாம் பிறப்பு, உள்ளுணர்வின் விழிப்பு,
உள்ளுணர்வில் உயர்ந்தால் நாமே இறைவன்
தூய மனமே இறையில்லம், சத்தியம், சிவம், சுந்தரம்

அன்பே தெய்வம், ஆணவமழிந்த தூய மனமே
சச்சித் ஆனந்தம், உண்மையே பாதை,
விழிப்புணர்வே தீபம், மெய்யறிவே ஞானம்

இறைவனை "அப்பா" "தந்தாய்" என அழையுங்கள் -
இறைவன் நம் தந்தை, நாம் அவர் குழந்தைகள்
நம்மை அறிந்தால் நாம் இறைமக்களே
ஆன்மீகக் கிளர்ச்சியாளராய் இயேசு பெருமான்





இறை மக்கள் நாம், நம்மை அறியும் அறிவே மீட்பு
அதுவே விடுதலை, இரட்சணியம், உன் மீட்பர் நீயே
உன் சிலுவையைச் சுமந்து என்னைப் பின் செல்

ஊதாரி வீடு திரும்பும் பயணம் மீட்பு
நம்மை நாம் அறிந்திட, நம்முள் தொடங்கும்
அகமுக தீர்த்த யாத்திரை இரட்சிப்பு
வழியும், உண்மையும், வாழ்வும் நம்முள்ளே

“இருப்பவர் நாமே” மோசேக்கு இயம்பிய தேவன்
வழியும், உண்மையும் வாழ்வும் “நானே”
உள்ளுணர்வின் உச்சம் தெய்வீகம்-அது நம்முள்ளே,
பயணியும், பாதையும் நாமே, கட உள்ளே கடவுள் நீ

“நான்” என்பதே வழி- நான் யார் என்பதே கேள்வி
கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்
தட்டுங்கள் உள்ளுணர்வின் வாயில் திறக்கப்படும்







கிடையும், நிலைக்குத்துமாய் சிலுவை
நடைப்பிண வாழ்வோ கிடையானது
விழிப்புணர்வோ நிலைக்குத்தானது-காலம்
நித்தியத்தை சந்தித்த அடையாளம் சிலுவை


நடைப்பிணங்கள் உயிர்பெற இயேசுவின் அழைப்பு
“இலாசரே வெளியே வா” ஆணவக் கல்லறையிலிருந்து
தூய மனத்தோராய் வாழ அழைப்பு
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்

நாமே இலாசர், உள்ளுணர்வின் ஒலி- ஓங்காரம், “வார்த்தை”
அழைக்கின்றது கேட்கச் செவியுள்ளோர் கேட்கின்றார்
கூட்டுப்புழுவிலிருந்து சிறகடித்துப் பறக்கும் வண்ணத்துப் பூச்சி,
வானமே நம் எல்லை, எளிய மனத்தவருக்கே இறையரசு

வித்தாய் அவர் வார்த்தை, பாதை, கல், முள்,
நல் மனங்களில் தூவும் உழவனாய் மனுமகன்
வாழுங்கலையின் தலைமகன்





இருமை கடந்து, நல்லோர், தீயோர் மேல்
தம் சூரியனை உதிக்கச் செய்யும் இறைவன்
எல்லோர் மேலும் மழையை பொழியும் தலைவன்




பன்றிகளுக்கு முன் தூவிய முத்துக்கள்
குருடர் முன் காட்சிப்படுத்திய வண்ண ஓவியம்
செவிடர் முன் இசைத்த தேவராகம்
சிலுவை மரணமோ மதவாத நியாயம்

வழியும், உண்மையும், வாழ்வும் “நானே”
கட உள்ளே கடவுள் நீ
நம்முள்ளே பாதை, நம்முள்ளே சத்தியம்
நம்முள்ளே நிலை வாழ்வு

சிறு மந்தையே அஞ்ச வேண்டாம்-உங்கள் தந்தை
உங்களைத் தம் ஆட்சிக்கு உட்படுத்த திருவுளம் கொண்டள்ளார்,
உங்கள் உடைமைகளை விற்றுத் தர்மம் செய்யுங்கள்,
இற்றுப்போகாத பணப்பைகளையும் விண்ணுலகில் குறையாத
செல்வத்தையும் தேடிக்கொள்ளுங்கள்-அங்கே திருடன்
நெருங்குவதில்லை, பூச்சி அரிப்பதில்லை





உங்கள் செல்வம் எங்குள்ளதோ-அங்கே
உங்கள் உள்ளமும் இருக்கும்
உன்னை நீ அறிந்தால் இறைமகன் நீ
உன் தேடல் மாறும், அமைதி உனதாகும்




மரித்தபின் நிலைவாழ்வு என்பது போதனை
வாழும்போதே நீ இறைமகன் என அறிவதே
மானுடா உன் சாதனை-நம்மில்தான்
கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

வழியும், உண்மையும், வாழ்வும் நம்முள்ளே
நம்மை நாமறிதலே மீட்பு, நமக்கு நாமே மீட்பர்
உள்ளுணர்வில் மலர்தலே நிலை வாழ்வு
என்னைக் காண்பது தந்தையைக் காண்பதாகும்




உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-பூவுலகில்
நல்மனத்தவருக்கு அமைதி-வானவர் கூறிய நற்செய்தி
உன்னதமும், நல்மனமும் ஒன்றே, அது நம்முள்ளே
இயேசு பெருமானின் கீதை, அகமுக யாத்திரையே பாதை

அன்பில் நிலைத்திருப்பவர் கடவுளில் நிலைத்திருக்கிறார்
கடவுளும் அவரில் நிலைத்திருக்கிறார்
என் தந்தையின் இல்லத்தில் அநேக உறைவிடங்கள் உண்டு




உன் இறைவனாகிய ஆண்டவரை உன் முழு அறிவோடும்,
உன் முழு இதயத்தோடும், உன் முழு ஆற்றலோடும்,
உன் முழு ஆன்மாவோடும் அன்பு செய்வாயாக
உன்னைப்போல் உன் அயலானை அன்பு செய்வாயாக
இறை வேண்டுவது
**எங்கும் இறைமயம், எல்லாம் இன்பமயம்**
கேட்கச் செவியுள்ளோரே கேளுங்கள்

**இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே**
*Pax Ravichandra-11-08-2024*

### The Gospel of Buddha by Carus with the following quote of Buddha:

*I am not the first Buddha who came upon the earth, nor shall I be the last. In due time another Buddha will arise in the world, a holy one, a supremely enlightened one, endowed with wisdom in conduct, auspicious, knowing the universe, an incomparable leader of men, a master of angels and mortals. He will reveal to you the same eternal truths which I have taught you. He will teach his philosophies, glorious in its origin, glorious at the climax, and, glorious at the goal. He will live a unifying life, wholly perfect and pure, such as I now proclaim. His disciples will number many thousand, while mine number many hundred... he will be known Maitreya.*

*Maitreya (Sanskrit) or Metteyya (Pali), is a bodhisattva who is regarded as the future Buddha of this world in all schools of Buddhism, prophesied to become Maitreya Buddha or Metteyya Buddha. In some Buddhist literature, such as the Amitabha Sutra and the Lotus Sutra, he is also referred to as Ajitā (Invincible, Unconquerable). In Tibetan Buddhism he is known as the "Lord of Love" or the "Noble Loving One" (Pakpa Jampa). The root of his name is the Sanskrit word maitrī (Pali: metta; meaning friendliness, loving-kindness). The name Maitreya is also related to the Indo-Iranian name Mitra.*